வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.1863 /அ1 /2025 நாள்:28.05.2025

பொருள் : தொழிலாளர் துறை – தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947 – தமிழில் பெயர் பலகைகள் அமைத்தல் – வேலூர் மாவட்டத்தில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள கோருதல் – சார்பு

பார்வை :
1. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண்.எஸ்2/32921/2024 நாள்.28.03.2025
2. வேலூர் மாவட்ட ஆட்சியர் கடித ந.க.எண்.இ/663/2025 நாள்.21.04.2025

-----

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் 25.03.2025 அன்று நடைபெற்ற காணொலி காட்சி கூட்டத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 மற்றும் விதிகள் 1948 விதி 15(1)ன்படியும், உணவு நிறுவனங்கள் சட்டம் 1958 மற்றும் விதிகள் 1959 விதி 42(B)ன்படியும் தொழிற்சாலைகள் சட்டம் 1948பிரிவு 92ன்படியும் தமிழில் பெயர் பலகையானது 5:3:2 என்ற முறையில் அமைப்பது தொடர்பாக நடைமுறைப்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் மே மாதம் 15 தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தமிழ் பெயர்பலகை வைக்காத கடைகள் நிறுவனங்களுக்கு மே 16ஆம் தேதி முதல் விளக்கம் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ரூ.2000/– அபராதமும் உணவு நிறுவனங்களுக்கு 5 பணியாளர்களுக்கு பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.100/–ம் 6 முதல் 10 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.200/– யும் 11 முதல் 20 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.300/–ம் 21 முதல் 50 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.400/–ம், 51 முதல் பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.500–ம், தொழிற்சாலைகளுக்கு தண்டனை அல்லது ரூ.1,00,000/. அபராதமும் விதிக்கப்படும் என அனைத்து துறை அலுவலர்களும் தத்தமது ஆட்சி எல்லையில் தமிழில் பெயர் பலகை 100 சதவீதம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள பார்வை 2இல் காணும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

எனவே மேற்காண் பொருள் சார்பாக பள்ளிக் கல்வி துறையின் கீழ் செயல்படும் அனைத்து அலுவலகம்/ பள்ளிகளில் பெயர் பலகைகள் மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக்கல்வி, தொடக்கக்கல்வி மற்றும் தனியார் பள்ளி) மற்றும் அரசு/நகரவை/அரசு உதவிபெறும்/உயர்/ மேல்நிலைப் பள்ளிகளில்

அமைக்கப்பெற்றுள்ள பெயர் பலகைகள் தமிழிலேயே அமைத்திட அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) (தொடக்கக்கல்வி) ஊராட்சி ஒன்றிய தொடக்க/நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு/நகரவை/அரசு நிதியுதவி பெறும்/உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களிடமிருந்து தமது ஆளுகைக்கு உட்பட்ட அறிக்கை பெற்று தங்கள் அலுவலக கோப்பில் பராமரிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளி) தங்கள் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து வகை பள்ளி தாளாளர், பள்ளி மேலாளர், பள்ளி நிர்வாகி அவர்களின் அறிக்கையினை பெற்று தங்கள் அலுவலக கோப்பில் பராமரிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அனைத்து வகை அரசு/நகரவை/அரசு நிதியுதவி பெறும்/உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் இப்பொருள் சார்பான அறிக்கையினை வேலூர் மாவட்டக் கல்வி (இடைநிலைக் கல்வி) அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ),
வேலூர் – 9.

பெறுநர்,
1. மாவட்டக் கல்வி அலுவலகங்கள்,
   (இடைநிலைக் கல்வி, தொடக்கக் கல்வி, தனியார் பள்ளி)
   வேலூர்.
2. தலைமையாசிரியர்கள்,
   அரசு/நகரவை/ அரசு நிதியுதவி பெறும்/ உயர்/ மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்,
1. மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
2. தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.
3. கோப்பிற்கு